

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையில், சில தினங்களுக்கு முன் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கணேச மூர்த்தி அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அமைச்சர்கள் முத்துசாமி, வெள்ளகோவில் சாமிநாதன், திருமதி கயல்விழி செல்வராஜ், ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் முனைவர் துரை.ரவிக்குமாரை ஆதரித்து விழுப்புரம் நகரம், சிக்னல், பழைய பேருந்து நிலையம், காந்தி சிலை, காமராஜர் தெரு, திரு. வி. க. வீதி, உழவர் சந்தை, இரயில் நிலையம், கீழ்ப்பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பானை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி எம்.பி, மாநில மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் இரா. இலட்சுமணன் எம். எல். ஏ, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், காங்கிரஸ் குலாம் மொய்தீன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமமூர்த்தி, வி.சி.க. துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, வி.சி.க. மாவட்டச் செயலாளர் பெரியார், நகரச் செயலாளர் சர்க்கரை, மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், நகர்மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் இருந்தனர்.



பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் பகுதியில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, 'இந்தியா' கூட்டணி பொள்ளாச்சி தொகுதி கழக வேட்பாளர் கே.ஈஸ்வரசாமியை ஆதரித்து வெள்ளமெனத் திரண்ட கூட்டத்தினர் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், அவைத்தலைவர் மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மேற்கு மாவட்டத்தில்

# சட்டமன்றத் தொகுதிவாரியாக தி.மு.கழக தேர்தல் பணிக்குழு!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!



சேலம், ஏப். 1-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதிவிடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் தேர்தல் பணிகளை கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து செம்மையாக செய்திட சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, சங்ககிரி சட்டமன்றத் தொகுதி, மேட்டூர் சட்டமன்றத் தொகுதி ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளுக்கு தொகுதி வாரியாக கழக நிர்வாகிகள் அடங்கிய தி.மு.க தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

**சேலம் நாடாளுமன்றத் தொகுதி எடப்பாடி சட்டமன்றம் தொகுதி**

பரணி கே.மணி, தொகுதி பார்வையாளர், பி.தங்கமுத்து, மாவட்ட கழக அவைத்தலைவர், அ.த. சம்பத்குமார், மாவட்ட கழக துணைச் செயலாளர், பி.ஏ. முருகேசன், தலைமை செயற்குழு உறுப்பினர், எஸ். பூவாகவுண்டர், தலைமை செயற்குழு உறுப்பினர், மு. சௌந்திரராசன், பொதுக் குழு உறுப்பினர்கள், டி. எஸ்.எம்.பாஷா, எடப்பாடி நகர கழக செயலாளர், ப.பரமசிவம், கொங்கணாபுரம் ஒன்றிய கழக செயலாளர், கே.என்.பி.நல்லதம்பி, எடப்பாடி ஒன்றிய கழக செயலாளர், இரா.அர்த்தனாரி ஈஸ்வரன் (எ) சின்னு, நங்கவள்ளி ஒன்றிய கழக செயலாளர்,

**நாமக்கல் நாடாளுமன்ற தொகுதி சங்ககிரி சட்டமன்ற தொகுதி**

நா.முருகவேல், தொகுதி பார்வையாளர், க.சுந்தரம், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள், க.அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர், எஸ்.பி.ரவிக்குமரன், பொதுக்குழு உறுப்பினர், திருமதி எஸ்.தங்கமணி, பொதுக்குழு உறுப்பினர், ஆர்.பாலகிருஷ்ணன், தாரமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், க.பச்சமுத்து, மகுடஞ்சாவடி ஒன்றிய கழக செயலாளர், கே. எம்.ராஜேஷ், சங்ககிரி ஒன்றிய கழக செயலாளர், குப்பு (எ) டி.எம்.எஸ்.குணசேகரன், தாரமங்கலம் நகர கழக செயலாளர், பெ. செல்வம், இடங்கணசாலை நகர கழக செயலாளர், மு.மணிகண்டன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், அ.கண்ணன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், பெ.கந்தசாமி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர், எஸ். சரவணன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர், திருமதி.எஸ்.பி.நிர்மலா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்,

**தர்மபுரி நாடாளுமன்ற தொகுதி மேட்டூர் சட்டமன்ற தொகுதி**

திப்பம்பட்டி ஆறுச்சாமி, தொகுதி பார்வையாளர், மு.ராமநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர், திருமதி. எஸ். எலிசபத் ராணி, மாவட்ட கழக துணை செயலாளர், பி.பொன்னுசாமி, மாவட்ட கழக பொருளாளர், பா.கோபால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ப.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஆர்.காசிவிஸ்வநாதன், பொதுக்குழு உறுப்பினர், என்.பழனியப்பன், பொதுக்குழு உறுப்பினர், எஸ்.ஜி.காசிவிஸ்வநாதன், மேட்டூர் நகர கழக செயலாளர், எஸ். சீனிவாசபெருமாள், மேச்சேரி ஒன்றிய கழக செயலாளர், எம்.மிதுன்சக்ரவர்த்தி, கொளத்தூர் ஒன்றிய கழக செயலாளர், திருமதி ப. ரம்யா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், க. விவேகானந்தன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஏப்ரல் 01 2024



துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிகோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு!!

தி.மு.க.மாநில தொண்டரணி செயலாளர்

தமிழ்ப்போராளி

த.மாசிலாமணி எம்.ஏ.,

தங்கள் நினைவுகளுடன்

மனைவி : ரமா.மாசிலாமணி மகன் : மா.தமிழ்ச்செல்வன் BE.,

மகள் : மா.கண்மணி BE., மருமகன் : ச.இளவரசன் BE.,

மற்றும் கழகத்தோழர்கள்


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சாத்தூர் பாலகிருஷ்ணன்**

**ஏப்ரல் 1 (1976)**



சுயமரியாதை இயக்கச் சுடர் சாத்தூர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

துவக்க காலம் தொட்டு இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் நீத்தவர்.

"சாத்தூர் பாலகிருஷ்ணன் – அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த ஆருயிர் உடன்பிறப்பு!" என தலைவர் கலைஞர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.